சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 17/2018

பெயர் திரு. என். ஜே. சுப்பிரமணி (வா.சா.3) நாள்.01.10.2024
த/பெ.

**வாதி சாட்சி 3 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி என்றால் வழக்கு தாக்கல் செய்பவர். பிரதிவாதி என்றால் எதிர் தரப்பினர். வழக்கு சொத்தின் புல எண் தெரியாது. நான்கு எல்லைகள் தெரியும். வழக்குச் சொத்திற்கு கிழக்கே பீம செட்டியார் இடம். மேற்கே அர்ச்சுனன் இடம். வடக்கே வாதி சொத்து. தெற்கே சிமென்ட் சாலை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள நான்கு எல்லைகள் தவறு. நான் கூறும் நான்கு எல்லைதான் சரி. மு.வ.158/1998 வழக்கு பற்றி எனக்கு தெரியாது. அவ்வழக்கின் நிறைவேற்று மனு 44/1997 தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. அந்த மனுவின் மீது சி.எம்.ஏ.எண். 1/2005 தாக்கல் செய்யப்பட்டு அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 2 முதல் 4 பிரதிவாதிகள் 14.7.2017 தேதியில் நீதிமன்றம் மூலம் சொத்துக்களை ஒப்புதல் எடுத்தனர் என்றால் எனக்கு தெரியாது. வழக்குச் சொத்துக்களை 2 முதல் 4 பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் நான் வாதிக்கு ஆதரவாக அவர் அனுபவித்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தான் வழக்குச் சொத்தை அனுபவித்து வருகிறார். நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. வாதி தான் அழைத்து வந்தார். எனக்கு வழக்குச் சொத்தைப் பற்றி சரிவர தெரியவில்லை என்றாலும், வாதிதான் அனுபவித்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரயில்ல.

மறுவிசாரணை – இல்லை.